செய்தி ஐந்து

## இயேசுவில் உள்ள நிஜமாகக் கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டு, நம் கலாச்சாரத்திற்குப் பதிலாக ஒரே புதிய மனிதனின் வாழ்க்கையை வாழ்தல்

வேத வாசிப்பு: எபே. 4:20-21; மத். 11:28-30; 14:19; யோவா. 5:19, 30; 7:18; 10:30

**I. நம் வாழ்க்கையின் தரம் நம் கலாச்சாரத்தின்படி அல்லாமல், இயேசு பூமியில் இருந்தபோது அவரால் வாழ்ந்துகாட்டப்பட்ட நிஜமாகிய, இயேசுவிலுள்ள நிஜத்தின்படி இருந்தாக வேண்டும்—எபே. 4:20-21:**

A. கர்த்தராகிய இயேசு பூமியில் எவ்விதத்தில் வாழ்ந்தாரோ, அதேவிதத்தில்தான் இன்று ஒரே புதிய மனிதன் வாழ வேண்டும்—மத். 11:28-30; யோவா. 6:57; 4:34; 5:17, 19, 30; 6:38; 17:4.

B. இயேசுவிலுள்ள நிஜம் (எபே. 4:21) என்பது, நான்கு சுவிசேஷங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி இயேசுவின் வாழ்க்கையின் உண்மையான நிலைமையைக் குறிக்கிறது; இயேசு தேவனிலும், தேவனைக் கொண்டும், தேவனுக்காகவும் எல்லாவற்றையும் செய்த ஒரு வாழ்க்கை வாழ்ந்தார்; தேவன் அவருடைய வாழ்க்கையில் இருந்தார், அவர் தேவனோடு ஒன்றாக இருந்தார்.

C. இயேசு எப்போதும் தேவனின் நீதி மற்றும் பரிசுத்தத்திற்குப் பொருத்தமான விதத்தில் வாழ்ந்தார்; இயேசுவின் வாழ்க்கையில், நிஜத்தின் நீதியும் பரிசுத்தமும் எப்போதும் காட்சியாக்கப்பட்டன—வ. 24:

1. இயேசுவின் மனித வாழ்க்கை நிஜத்தின்படியானதாக, அதாவது, நீதியாலும் பரிசுத்தத்தாலும் நிறைந்த சாட்சாத்து தேவனின்படியானதாக இருந்தது.
2. தேவன் மகிமைப்படுத்தப்படுவதும், வெளிக்காட்டப்படுவதுமாகிய இந்த நிஜத்தின் நீதி மற்றும் பரிசுத்தத்தில்தான், புதிய மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான்.

D. நாம் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவும், ஒரு நிஜத்தின் வாழ்க்கை வாழ அவரில் கற்பிக்கப்படவும் வேண்டும்; கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வது என்றால், எளிமையாக, கிறிஸ்துவின் அச்சில் வார்ப்பிக்கப்படுவதாகும், அதாவது, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தசாயலாக்கப்படுவதாகும்—வவ. 20-21; ரோ. 8:28-29; 2 யோவா. 1; யோவா. 4:23-24.

E. ஒரு கூட்டு நபராக, இந்தப் புதிய மனிதன் இயேசுவிலுள்ள நிஜத்தின்படி ஒரு நிஜத்தின் வாழ்க்கை வாழ வேண்டும், அதாவது தேவனை வெளிக்காட்டும் ஒரு வாழ்க்கை வாழ வேண்டும்.

F. நாம் நம் மனதின் ஆவியின்படி வாழ்ந்தால், நம்மிடம் கூட்டான புதிய மனிதனின் ஒரு தினசரி வாழ்க்கை—இயேசுவிலுள்ள நிஜத்தோடு ஒத்திருக்கும் ஒரு வாழ்க்கை—இருக்கும்—ஏபே. 4:23.

**II. ஒரே புதிய மனிதனின் வாழ்க்கை துல்லியமாக இயேசுவின் வாழ்க்கை இருந்தவண்ணமாகவே இருக்க வேண்டும்; கூட்டு தேவ-மனிதனாகிய, ஒரே புதிய மனிதனுக்காக நாம் ஒரு தேவ-மனித வாழ்க்கை வாழ வேண்டும்—பிலி. 1:19-21; 3:10; எபே. 4:20-21; ஒப். 1 யோவா. 4:17 மற்றும் அடிக்குறிப்பு 5:**

A. கிறிஸ்துவின் மனித வாழ்க்கை, மனித நற்பண்புகளில் தேவனின் குணாம்சங்களை வெளிக்காட்ட மனிதன் தேவனை வாழ்வதாக இருந்தது; அவரது மனித நற்பண்புகள் தெய்வீகக் குணாம்சங்களால் நிரப்பப்பட்டு, அவற்றோடு கலந்திணைந்து, அவற்றால் பூரிதமாக்கப்பட்டிருந்தன—லூக். 1:26-35; 7:11-17; 10:25-37; 19:1-10:

1. கர்த்தராகிய இயேசு பூமியில் இருந்தபோது, அவர் ஒரு மனிதராக இருந்தபோதிலும், தேவனால் வாழ்ந்தார்—யோவா. 6:57; 5:19, 30; 6:38; 8:28; 7:16-17.
2. கர்த்தராகிய இயேசு எல்லாவற்றிலும் தேவனை வாழ்ந்து, தேவனை வெளிக்காட்டினார்; அவர் செய்ததெல்லாம் அவரிலிருந்தும், அவர் மூலமாகவும் தேவனின் செயலாக இருந்தது—14:10.
3. கர்த்தராகிய இயேசு வாழ்ந்த வாழ்க்கை முற்றும்முடிய தேவனுடைய புதிய ஏற்பாட்டுப் பொருளாட்சியின்படியும், பொருளாட்சிக்காகவும் இருந்தது என்று மாற்கு சுவிசேஷம் வெளிப்படுத்துகிறது.

B. முதல் தேவ-மனிதனின் விரிவாக்கம், அதிகரிப்பு, மறுஉற்பத்தி, மற்றும் தொடர்ச்சியாக, நாமும் அவர் வாழ்ந்த அதே விதமான வாழ்க்கையை வாழ வேண்டும்—1 யோவா. 2:6:

1. கர்த்தருடைய தேவ-மனித வாழ்க்கை நம் தேவ-மனித வாழ்க்கைக்கு—தேவனை மனுஷீகத்தில் வெளிக்காட்டும்படி வாழ சிலுவையில் அறையப்பட்டிருப்பதற்கு—ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தியது—கலா. 2:20.
2. நாம் நம்மை மறுதலிக்கவும், கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒத்தசாயலாக்கப்படவும், அவருடைய ஆவியின் உதாரத்துவமான நிரப்பீட்டினால் அவரைப் பெரிதாக்கிக்காட்டவும் வேண்டும்—மத். 16:24; பிலி. 3:10; 1:9-21.

3. நாம் சுய-மேம்பாட்டை நிராகரிக்க வேண்டும் அதோடு, இயற்கை மனிதனின் கட்டமைப்பையும் கண்டனம் செய்ய வேண்டும்; கிறிஸ்தவ நற்பண்புகள் சாராம்சத்தில் தெய்வீக ஜீவனோடும், தெய்வீக சுபாவத்தோடும், சாட்சாத்து தேவனோடும் தொடர்புடையவை என்பதை நாம் உணர வேண்டும்—கலா. 5:22-23.

4. ஒரு தேவ-மனிதனின் வாழ்க்கை வாழ்ந்தவர் இப்போது நம்மிலும் நம் மூலமாகவும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆவியானவராக இருக்கிறார்; நம்மை நிரப்பவும், நம்மை ஆக்கிரமிக்கவும் இவரைத் தவிர வேறு ஒருவரையும் நாம் அனுமதிக்கக் கூடாது—2 கொரி. 3:17; 13:5; எபே. 3:16-19.

5. லூக்கா 6:36இல் கர்த்தர் நமக்குக் கொடுத்த அவருடைய கட்டளையை (ஜெபத்தின் ஆவியிலும், சூழலிலும்) பெறுவதற்கு நாம் நம் முழு ஆள்தத்துவத்தையும் அவருக்குத் திறக்க வேண்டும்: "உங்கள் பிதா மனதுருக்கம் நிறைந்தவராக இருப்பதுபோல, நீங்களும் மனதுருக்கம் நிறைந்தவர்களாக இருங்கள்" (கிரே.); நாம் ஒவ்வொரு காலையிலும் கர்த்தரை மனதுருக்கம் நிறைந்தவராகத் தொடர்புகொள்ள வேண்டும்—புல. 3:22-23; ரோ. 9:15 மற்றும் அடிக்குறிப்பு 2; யாத். 34:6; சங். 103:8; லூக். 1:78-79; 10:25-37; ரோ. 12:1.

**III. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷிக்கிற அற்புதத்தை நிகழ்த்தியதில், தம்மிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி கர்த்தர் தம் சீஷர்களுக்குப் பயிற்சி அளித்தார்—மத். 14:14-21; 11:28-30:**

A. அவர் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, அவற்றை ஆசீர்வதிக்கப் போகும்போது, அவர் பரலோகத்தை அண்ணாந்து பார்த்தார் என்று மத்தேயு 14:19 கூறுகிறது:

1. பரலோகத்தை அண்ணாந்து பார்ப்பது அவர் தம் ஊற்றாகிய, பரலோகத்திலுள்ள தம் பிதாவை அண்ணாந்து பார்த்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது:

a. ஆசீர்வாதத்தின் ஊற்று தாமல்ல என்றும், அனுப்பப்பட்டவரல்ல, அனுப்புகிற பிதாவே ஆசீர்வாதத்தின் ஊற்று என்றும் அவர் அறிந்திருந்தார் என்றும் இது சுட்டிக்காட்டுகிறது—ஒப். ரோ. 11:36.

b. நம்மால் எவ்வளவு செய்ய முடிந்தாலும் சரி அல்லது என்ன செய்வதென்று நமக்கு எவ்வளவு தெரிந்திருந்தாலும் சரி, நம் செயலின்மீது அனுப்புபவரின் ஆசீர்வாதம் நமக்குத் தேவை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும், இதனால் நம்மீது நம்பிக்கை வைக்காமல், அவரில் நம்பிக்கை வைப்பதன்மூலம் நாம் நிரப்பீட்டின் வாய்க்கால்களாக இருக்க முடியும்—ஒப். மத். 14:19; எண். 6:22-27.

2. அவர் பரலோகத்தில் உள்ள பிதாவை அண்ணாந்து பார்த்தது, பரலோகத்திலுள்ள பிதாவினால் அனுப்பப்பட்ட பூமியிலுள்ள குமாரனாக, அவர் பிதாவில் நம்பிக்கை வைத்து, அவருடன் ஒன்றாயிருந்தார் என்று சுட்டிக்காட்டியது—யோவா. 10:30:

a. நமக்கு என்ன தெரியும் என்பதும், நம்மால் என்ன செய்ய முடியும் என்பதும் ஒன்றுமில்லை; கர்த்தருடன் ஒன்றாயிருப்பதும், அவரில் நம்பிக்கை வைப்பதுமே நம் ஊழியத்தில் மிகமுக்கியமானதாகும்—ஒப். 1 கொரி. 2:3-4.

b. நாம் கர்த்தரோடு ஒன்றாயிருப்பதாலும், அவரில் நம்பிக்கை வைப்பதாலும் மட்டுமே ஆசீர்வாதம் வருகிறது—ஒப். 2 கொரி. 1:8-9.

3. கர்த்தர் தாமாய் எதையும் செய்யவில்லை—யோவா. 5:19; ஒப். மத். 16:24:

a. நாம் நம்மை மறுதலிக்க வேண்டும், நாமாக எதையும் செய்யும் நோக்கம் நம்மிடம் இருக்கக் கூடாது, மாறாக, அவரிலிருந்து எல்லாவற்றையும் செய்வதே நம் நோக்கமாக இருக்க வேண்டும்.

b. இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதாரத்துவமான நிரப்பீட்டினால் நாம் சுயத்தை நிராகரித்து, வேறொரு ஜீவனால் வாழ தொடர்ந்து நம் ஆவியைப் பயிற்சிசெய்ய வேண்டும்—பிலி. 1:19-21.

4. கர்த்தர் தம் சொந்த சித்தத்தைத் தேடவில்லை, மாறாக, தம்மை அனுப்பியவரின் சித்தத்தைத் தேடினார்—யோவா. 5:30; 6:38; மத். 26:39, 42:

a. அவர் தம் யோசனையையும், தம் நோக்கத்தையும், தம் குறிக்கோளையும் நிராகரித்தார்.

b. இந்த ஒரு காரியத்திற்கு நாம் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்—ஏதேனும் வேலை செய்ய நாம் அனுப்பப்படும்போது, அந்த வாய்ப்பை நாம் நம் சொந்த இலக்கை நாட

பயன்படுத்தக் கூடாது; நாம் நம்மை அனுப்பும் கர்த்தரின் யோசனை, குறிக்கோள், இலட்சியம், இலக்கு, மற்றும் நோக்கத்தையே தேடிச் செல்ல வேண்டும்—ஒப். 1 தீமோ. 5:2.

5. கர்த்தர் தம் சொந்த மகிமையைத் தேடவில்லை, மாறாக, தம்மை அனுப்பிய பிதாவின் மகிமையைத் தேடினார்— யோவா. 7:18; 5:41; ஒப். 12:43:
   a. பேராவல் இலட்சித்துடன் இருப்பது, உங்கள் சொந்த மகிமையை தேடுவதாகும்—ஒப். 3 யோவா. 9.
   b. நம் சுயம், நம் குறிக்கோள், நம் பேராவல் இலட்சியம் ஆகியவை நம் வேலையில் மூன்று பெரிய அழிக்கும் “புழுக்கள்” என்பதை நாம் பார்க்க வேண்டும்; நாம் அவற்றை வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

B. நாம் கர்த்தருக்காக அவரது மீட்டுத்திருப்புதலில் எப்போதும் பயன்படுத்தப்படப் போகிறோம் என்றால், ஒரே புதிய மனிதனுக்காக நம் சுயம் மறுதலிக்கப்பட வேண்டும், நம் குறிக்கோள் நிராகரிக்கப்பட வேண்டும், நம் பேராவல் இலட்சியம் கைவிடப்பட வேண்டும்—மத். 16:24.

© 2020 Living Stream Ministry